## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இரண்டாம் வருட / இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2015 / 2016 (2018 ஆகஸ்ட் / செப்)

# TL 2222 நவீன தமிழ்க் கவிதையின் வளர்ச்சி
# Development of Modern Tamil Poetry

நேரம் : 02 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து **எவையேனும் இரு வினாக்களையும்** இரண்டாம் பகுதியிலிருந்து **எவையேனும் இரு வினாக்களையும்** தெரிவுசெய்து எல்லாமாக **நான்கு வினாக்களுக்கு** விடை தருக.

## பகுதி I

(01) (அ) நவீன கவிதை என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (05 புள்ளிகள்)

(ஆ) தமிழில் நவீன கவிதையின் பண்புகளை உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளிகள்)

(02) (அ) நவீன தமிழ்க்கவிதையில் கூறப்பட்ட திராவிட இயக்கக் கருத்துக்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

(ஆ) முடியரசனின் கவிதைகளில் திராவிட இயக்கச் சிந்தனைகள் வெளிப்படும் விதம் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைக்குக. (15 புள்ளிகள்)

(03) (அ) புதுக்கவிதை என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (05 புள்ளிகள்)

(ஆ) ஆரம்பகாலப் புதுக்கவிதைப் பண்புகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (20 புள்ளிகள்)

## பகுதி II

(04) பாரதியாரின் கவிதைகளில் 'விடுதலை' பற்றிய சிந்தனைகள் வெளிப்படுமாற்றினை உதாரணங்களுடன் விபரிக்குக. (25 புள்ளிகள்)

(05) நவீன கவிதை வளர்ச்சியில் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் கவிதைகள் பெறும் இடத்தினை மதிப்பிடுக. (25 புள்ளிகள்)

(06) "நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை காந்தியச் செல்வாக்கினால் பெரிதும் ஈர்க்கப்பட்டு தனது கவிதைகளை யாத்துள்ளார்" இக்கூற்றினை ஆதாரங்களுடன் விளக்குக. (25 புள்ளிகள்)

***********************************